# திருநெல்வேலி மாநகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2019-2020

# திருநெல்வேலி மாநகராட்சி

## 2019-2020-ம் ஆண்டின் திருநெல்வேலி மாநகராட்சியின் ஆட்சி அறிக்கை

### அ.பொது அறிக்கை

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 110 நாள் 31.3.1994-ன்படி திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் ஆகிய மூன்று நகராட்சிகளையும், தச்சநல்லூர் நகர பஞ்சாயத்தும், அழகநேரி., வெள்ளக்கோவில், சேந்திமங்கலம், திருவண்ணாதபுரம், பாளையங்கோட்டூர், கரையிருப்பு, திம்மராஜபுரம், வி.எம்.சத்திரம், மேலநத்தம், கருப்பன்துறை, கண்டியப்பேரி ஆகிய 11 பஞ்சாயத்து பகுதி முழுவதும் மற்றும் ரெட்டியார்பட்டி பஞ்சாயத்தில் வெங்கழுநீர் சமுத்திரம் கிராமம், கொக்கத்திகுளம் கிராமம், நொச்சிகுளம் பஞ்சாயத்தில் ராஜகோபாலபுரம் கிராமம், திருப்பணிகரிசல்குளம் பஞ்சாயத்தில் கருவேலன்குளம் கிராமம், வாகைக்குளம் கிராமம், நரசிங்கநல்லூர் பஞ்சாயத்து பகுதியில் நரசிங்கநல்லூர் பஞ்சாயத்து சர்வே எண்கள் 84 முதல் 111, 113 முதல் 116, 434 முதல் 481 ஆகியவைகளை ஒருங்கிணைத்து திருநெல்வேலி மாநகராட்சி தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண். 152 நாள் 01.06.1994-ன்படி 1.6.1994 முதல் திருநெல்வேலி மாநகராட்சியாக செயல்பட்டு வருகின்றது.

புவியியலார் கூற்றுப்படி திருநெல்வேலி மாநகராட்சி கடல் மட்டத்தில் இருந்து 36 மீட்டர் உயரத்திலிருக்கின்றது.

**எல்லைப் பரப்பும் மக்கள் தொகையும்**

மாநகரின் மொத்தப் பரப்பளவு 108.65 ச.கி.மீ. இதன் மக்கள் தொகை 1991-ன் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 368550 ஆகும். 1997-ன் இதன் இடைக்கால மக்கள் தொகை 408900 ஆகும். 2001-ன் மக்கள் தொகை 4,11,831. இதில் ஆண்கள் 2,03,232 பெண்கள் 2,08,599 ஆகும். 2011-ன் மக்கள் தொகை 474838 இதில் ஆண்கள் 234639 பெண்கள் 240195 இதரவை 4 ஆகும்.

**மன்றத்தின் வளர்ச்சி நிலை.**

மாமன்றத்தின் காலம் 24.10.2016-வுடன் முடிவடைந்த நிலையில் அரசாணை எண். 147 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (தேர்தல்) நாள் 24.10.2016-இல் 31.12.2016 முடிய ஆணையாளரை தனி அலுவலராக நியமித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் அரசாணை எண். 187 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள் 31.12.2016-ல் 30.06.2017 முடியவும், அரசாணை எண் : 67 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்: 29.06.2017ன் படி 01.07.2017 முதல் தனி அலுவலர் பதவி காலத்தினை நீட்டித்து ஆணையிடப்பட்டுள்ளது.

1.04.2019 முதல் 5.11..2019 முடிய திருமதி.பெ.விஜயலெட்சுமி., பி.ஏ. அவர்கள் ஆணையாளர் மற்றும் தனி அலுவலராக பணிபுரிந்துள்ளார்.

5.11.2019 முதல் 31.3.2020 முடிய திரு.க.கண்ணன். பி.எஸ்.சி.பி.எட்.. அவர்கள் ஆணையாளர் மற்றும் தனி அலுவலராக பணிபுரிந்துள்ளார்.

| வ.எண் | 1996-ல் நடந்த தேர்தலில் வார்டுகளும் அது ஒதுக்கப்பட்டுள்ள விபரங்களும் | 2001ல் நடந்த தேர்தலில் வார்டுகளும் அது ஒதுக்கப்பட்டுள்ள விபரங்களும் |
|---|---|---|
| 1. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பொது —— 4 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பொது —— 4 |
| 2. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பெண்கள் - 2 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பெண்கள் - 2 |
| 3. | பெண்கள் - 17 | பெண்கள் - 17 |
| 4. | இதர வகுப்பினர் - 32 | இதர வகுப்பினர் - 32 |
| 5. | மொத்தம் - 55 | மொத்தம் - 55 |
| வ.எண் | 2006ல் நடந்த தேர்தலில் வார்டுகளும் அது ஒதுக்கப்பட்டுள்ள விபரங்களும் | 2011ல் நடந்த தேர்தலில் வார்டுகளும் அது ஒதுக்கப்பட்டுள்ள விபரங்களும் |
| 1. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பொது —— 4 | வ.மேயர் - பெண்கள் பொது —— 1 |

| | | |
|---|---|---|
| 2. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பெண்கள் - 3 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பொது — 4 |
| 3. | பெண்கள் - 16 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பெண்கள் - 3 |
| 4. | இதர வகுப்பினர் - 32 | பெண்கள் - 16 |
| 5. | மொத்தம் - 55 | இதர வகுப்பினர் - 32 |
| | | மொத்தம் - 55 |

மாநகராட்சியின் தகுதி நிலை

திருநெல்வேலி மாநகராட்சியானது 24.08.1987ம் தேதி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை அரசாணை எண்: 828ன் படி சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வந்தது. அரசு தனது 22.11.1993-ம் தேதிய ஆணை எண்: 260-ல் இந்நகராட்சியுடன், அருகிலுள்ள பாளையங்கோட்டை நகராட்சி, மேலப்பாளையம் நகராட்சி, தச்சநல்லூர் டவுண் பஞ்சாயத்து மற்றும் 11 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கி மாநகராட்சியாக உயர்த்த ஆட்சேபனைகள் கோரப்பட்டு 31.03.1994-ம் தேதிய ஆணை எண்: 110ன் படி ஒரே நகராட்சியாக உருவாக்கி 01.06.1994 முதல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை ஆணை எண்: 152, நாள்: 01.06.1994-ல் மாநகராட்சியாக அறிவித்து தனி அதிகாரியினை நியமித்து 01.06.1994 முதல் மாநகராட்சியாக செயல்பட்டு வருகின்றது.

அறிக்கையாண்டில் 01.04.2019 முதல் 31.03.2020 முடிய நடைபெற்ற மாமன்ற சாதாரண மற்றும் அவசரக் கூட்டத்தில் வைக்கப்பட்டு முடிவு செய்யப்பட்ட பொருள் விபரம்

| வருடம் | தேதி | சாதாரண கூட்டம் | அவசர கூட்டம் | சிறப்புக் கூட்டம் | |
|---|---|---|---|---|---|
| ஜூன் 2019 | 07.06.2019 | 1 | – | – | |
| ஜூலை 2019 | 01.07.2019 | 1 | – | – | |
| | 30.07.2019 | – | 1 | | |
| ஆகஸ்ட் 2019 | 30.08.2019 | 1 | – | – | |
| அக்டோபர் 2019 | 30.10.2019 | 1 | – | – | |
| நவம்பர் 2019 | 18.11.2019 | 1 | – | – | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 21.11.2019 | – | 1 | – | 4 |
| டிசம்பர் 2019 | 10.12.2019 | 1 | – | – | 4 |
| | 30.12.2019 | – | 1 | – | 15 |
| ஜனவரி 2020 | 08.01.2020 | 1 | – | – | 1 |
| | 30.01.2020 | – | 1 | – | 1 |
| பிப்ரவரி 2020 | 14.02.2020 | 1 | – | – | 2 |
| | 25.02.2020 | – | 1 | – | 22 |
| மார்ச் 2020 | 12.03.2020 | 1 | – | – | 4 |
| | 30.03.2020 | – | 1 | – | 14 |
| மொத்தம் | | 9 | 6 | | 164 |

1) மொத்தக் கூட்டம் – 15

2) சாதாரண கூட்டம் – 9

3) அவசரக் கூட்டம் – 6

4) சிறப்புக் கூட்டம் – –

மன்றத்திற்கு வைக்கப்பட்ட மொத்த பொருள்கள் – 164

மன்றத்தில் முடிவு எடுக்கப்பட்டவை – 164

நிலுவையில் உள்ள மன்ற பொருட்கள் – ––

| | நியமனக்குழு கூட்டங்கள் | மாமன்ற மேல்முறையீடு குழு கூட்டங்கள் |
|---|---|---|
| நடைபெற்ற கூட்டங்கள் | 6 | – |
| வைக்கப்பட்ட பொருட்கள் | 8 | – |
| ஆய்வு செய்து முடிக்கப்பட்டவை | 8 | – |
| நிலுவையில் உள்ளவை | – | – |

நிர்வாகம்

1.04.2019 முதல் 5.11.2019 முடிய திருமதி. பெ. விஜயலெட்சுமி., பி.ஏ., அவர்கள் ஆணையாளராக பணிபுரிந்துள்ளார்.

5.11.2019 முதல் 31.3.2020 முடிய திரு.க.கண்ணன் பி.எஸ்.சி.பி.எட்.. அவர்கள் ஆணையாளராக பணிபுரிந்துள்ளார்.

மைய அலுவலகத்தில் மாநகரப் பொறியாளர், செயற்பொறியாளர் செயற் பொறியாளர்( திட்டம்) ,உதவி ஆணையாளர் (கணக்குகள்), மாநகர நல அலுவலர், உதவி ஆணையாளர் (நிர்வாகம்), ஆகிய பணியிடங்களில் அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட அலுவலர்கள் பணிபுரிந்து வந்துள்ளார்கள்.

மாநகரப் பொறியாளர், டாக்டர் திரு.வி.நாராயணன் நாயர், Ph.D., 01.04.2019 முதல் 31.05.2019 முடிய

1.6.2019 முதல் காலிப்பணியிடம்

செயற் பொறியாளர் திரு.எல்.கே.பாஸ்கர்., எம்.டெக்., 1.4.2019 முதல் 31.03.2020 முடிய

செயற்பொறியாளர் (திட்டம்) திரு. என்.எஸ்.நாராயணன். BE.,M.T.P 1.4.2019 முதல் 31.03.2020 முடிய

மாநகர நல அலுவலர் டாக்டர் டி.என். சத்தீஸ்குமார்., எம.டி.. 01.04.2019 முதல் 31.03.2020 முடிய

உதவி ஆணையாளர்(கணக்குகள்) திருமதி எஸ். கீதா,1.4.2019 முதல் 31.08.2019 முடிய

உதவி ஆணையாளர்(கணக்குகள்) (பொ) திருமதி.பா.சொர்ணலதா எம்.ஏ.,1.9.2019 முதல் 10.11.2019

உதவி ஆணையாளர் (கணக்குகள்) 11.11.2019 முதல் 31.3.2020 முடிய

உதவிஆணையாளர் (நிர்வாகம்) திருமதி. தி.சுப்புலெட்சுமி,பி.ஏ.,1.4.2019 முதல் 31.7.2019 முடிய

உதவி ஆணையாளர்(நிர்வாகம்)(பொ) திருமதி.பா.சொர்ணலதா எம்.ஏ.,1.8.2019 முதல் 10.11.2019

திரு.லெ.வெங்கட்ராமன் 11.11.2019 முதல் 31.3.2020

1.4.2019 முதல் 13.2.2020 திரு.லெ.வெங்கட்ராமன் உதவி ஆணையாளர் (வருவாய்) ஆக கூடுதல் பொறுப்பு வகித்துள்ளார்.

14.2.2020 முதல் 31.3.2020 முடிய திரு.ஜே.பிரேம் ஆனந்த் பி.எஸ்.சி.. உதவி ஆணையாளர்(வருவாய்) (பொ) ஆகப் பணிப்புரிந்துள்ளார்.

நிர்வாக நலனுக்காக இம்மாநகராட்சி நான்கு வார்டு அலுவலகங்களாக செயல்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வார்டு அலுவலகமும் ஒரு உதவி ஆணையர் கீழ் இயங்கி வருகின்றது. அதன்படி அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட உதவி ஆணையர்கள் வார்டு அலுவலகங்களில் பணியாற்றி வந்துள்ளார்கள்.

தச்சநல்லூர் மண்டலம்

திருமதி. தி. சுப்புலெட்சுமி,பி.ஏ. 01.04..2019 முதல் 31.07.2019 முடிய உதவி ஆணையாளர் (பொ) ஆக பணிபுரிந்துள்ளார்.

திரு.லெ.வெங்கட்ராமன் 1.8.2019 முதல் 4.12.2019 முடிய உதவி ஆணையாளர்(பொ) ஆக பணிபுரிந்தள்ளார்.

திரு.சு.அய்யப்பன் எம்.பி.ஏ., 5.12.2019 முதல் 31.3.2020 முடிய உதவி ஆணையாளர் ஆக பணிபுரிந்துள்ளார்.

திருமதி.தெ.சாந்தி எம்.டெக் 1.4.2019 முதல் 31.3.2020 உதவி செயற் பொறியாளர் ஆகப் பணிபுரிந்துள்ளார்.

பாளையங்கோட்டை மண்டலம்

திருமதி. வி.சந்தியா, தனித்துணை ஆட்சியர், 1.4..2019 முதல் 19.6.2019 முடிய உதவி ஆணையாளர் ஆக பணிபுரிந்துள்ளார்.

திரு.மு.கோட்டைக்குமார் துணை ஆட்சியர் 20.6.2019 முதல் 24.10.2019 முடிய உதவி ஆணையாளர் ஆகப் பணிபுரிந்தள்ளார்.

திரு.சி.பாஸ்கரன் உதவி செயற் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) 25.10.2019 முதல் 17.11.2019 முடிய உதவி ஆணையாளர் (பொ) ஆகப் பணிபுரிந்துள்ளார்.

திரு.ஜே.பிரேம்ஆனந்த் பி.எஸ்.சி.,18.11.2019 முதல் 31.3.2020 முடிய உதவி ஆணையாளராகப் பணிபுரிந்துள்ளார்.

திரு. சி.பாஸ்கரன் உதவி செயற் பொறியாளர் (தி.க.மே) 1.4.2019 முதல் 31.03.2020 வரை உதவி செயற்பொறியாளர் (பொ) ஆக பணிபுரிந்துள்ளார்.

மேலப்பாளையம் மண்டலம்

திரு.ஜெ.ரவிக்குமார், 1.4.2019 முதல் 14.7.2019 முற்பகல் முடிய உதவி ஆணையாளராக பணிபுரிந்துள்ளார்.

திருமதி.நே.சுகிபிரேமலா 15.7.2019 முதல் 31.3.2020 முடிய உதவி ஆணையாளர் ஆகப் பணிபுரிந்துள்ளார்.

திரு. து. கருப்பசாமி,B.E. 01.04.2019 முதல் 29.2.2020 முடிய உதவி செயற்பொறியாளர் - ஆக பணிபுரிந்துள்ளார்.

திரு.எஸ்.லெனின் பி.இ. உதவிப் பொறியாளர் 11.3.2020 முதல் 31.3.2020 முடிய உதவி செயற் பொறியாளர் (பொ) ஆகப் பணிப்புரிந்துள்ளார்.

**திருநெல்வேலி மண்டலம்**

திரு.டி.சாமுவேல் செல்வராஜ்., பி.இ. 1.04.2019 முதல் 30.6.2019 முடிய உதவி ஆணையாளர்(பொ) ஆக பணிபுரிந்துள்ளார்.

1.7.2019 முதல் 24.10.2019 முடிய திரு.மு.கோட்டைக்குமார் உதவி ஆணையாளர்(பொ) ஆகப் பணிபுரிந்துள்ளார்.

25.10.2019 முதல் திருமதி பா சொர்ணலதா எம்.ஏ., உதவி ஆணையாளர்(பொ) ஆக பணிபுரிந்துள்ளார்.

திரு. டே.சாமுவேல் செல்வராஜ்,B.E. 01.04.2019 முதல் 30.06.2019 முடிய உதவி செயற் பொறியாளர்-ஆக பணிபுரிந்துள்ளார்.

திருமதி.தெ.சாந்தி எம்.டெக்.. 1.7.2019 முதல் 31.3.2020 முடிய உதவி செயற் பொறியாளர் (பொ)

ஆணையாளர்
திருநெல்வேலி மாநகராட்சி
20/8/2020
21/8/2020

# திருநெல்வேலி மாநகராட்சி

## நிர்வாக அறிக்கை (Administrative Report) 2019 – 2020

### உ) நகரமைப்புப் பிரிவு (திட்டப்பிரிவு)

திருநெல்வேலி மாநகராட்சியின் நகரமைப்பு சம்பந்தப்பட்ட பணிகளை திட்டப்பிரிவு கவனித்து வருகிறது. மாநகராட்சியின் நகரமைப்பு பணிகளை செயற்பொறியாளர் (திட்டம்), இளநிலைப் பொறியாளர் (திட்டம்), ஒரு உதவியாளர், மற்றும் நான்கு மண்டல அலுவலகத்திலும் நகரமைப்பு பணிகள் கவனிக்கப்பட்டு வருகின்றது.

கட்டிட அனுமதி, மனைப்பிரிவு, மனை உட்பிரிவு, இயந்திர நிறுவன அனுமதி கோரும் விண்ணப்பங்கள், நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி கோரும் மனுக்கள், திட்ட அனுமதி கோரும் மனுக்கள், நகரமைப்புத் திட்ட மாற்றம் செய்ய அனுமதி கோரும் மனுக்கள், மற்றும் மாநகராட்சியின் வருமானம் தரக்கூடிய வளர்ச்சித் திட்டங்கள் தயார் செய்து சம்பந்தப்பட்ட துறைகளிடம் ஒப்புதல் பெறுதல் போன்ற பொருட்கள் இப்பிரிவில் முக்கிய பணிகளாகும்.

55 வார்டுகளைக் கொண்ட திருநெல்வேலி மாநகராட்சியின் மொத்த விஸ்தீரணம் 108.65 சதுர கிலோ மீட்டராகும். இதன் மக்கள் தொகை 2011ம் வருட மக்கட்தொகை கணக்குப்படி 4,74,838 ஆகும். திருநெல்வேலி மாநகராட்சியில் முந்தைய திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் ஆகிய மூன்று நகராட்சிகளும், தச்சநல்லூர் நகர பஞ்சாயத்தும் முழுமையான 11 கிராம பஞ்சாயத்துக்களும், 3 பகுதி கிராம பஞ்சாயத்துக்களும் ஆக மொத்தம் 37 வருவாய் கிராமங்களுடன் உள்ளடக்கியுள்ளது. அரசு அறிவுரைகளின்படி நிர்வாக வசதிக்காக திருநெல்வேலி மாநகராட்சியை, திருநெல்வேலி, பாளையங்கோட்டை மேலப்பாளையம், தச்சநல்லூர் என நான்கு வார்டு அலுவலகங்களாக பிரிக்கப்பட்டு அவைகள் உதவி ஆணையர்களின் கீழ் செயல்பட்டு வருகின்றன. மேற்படி வார்டு பகுதிகளில் நகரமைப்பு பணிகளை வார்டு அலுவலகங்களில் பணிபுரியும் உதவி/ இளநிலைப் பொறியாளர்கள் மூலம் பரிந்துரை செய்யப்பட்டு, மைய அலுவலக திட்டப்பிரிவு மூலம் நகரமைப்பு பணிகள் அனைத்தும் ஆணையாளர் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

திருநெல்வேலி மாநகராட்சியின் முறையான வளர்ச்சிக்காக மறு இணக்கம் அளிக்கப்பட்டுள்ள முழுமைத் திட்டம் மற்றும் 62 விரிவு அபிவிருத்தி திட்டங்கள் ஆகியவை திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமத்தால் தயார் செய்யப்பட்டு நகரின் வளர்ச்சியை மேற்படி திட்டங்களின்படி முறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

## முழுமைத் திட்டம் ( Master Plan )

திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதி முழுமைக்கும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971ன்படி முழுமைத் திட்டம் தயார் செய்யப்பட்டு அத்திட்டத்திற்கு அரசிடமிருந்து அரசாணை எண். 505 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.20.7.94-ல் இசைவு பெறப்பட்டு, இசைவு பெறப்பட்ட நாள் முதல் அத்திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது. அதன்பிறகு தேவையான ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் பெறப்பட்டு, அதன் பின்னர் மேற்படி திட்டத்திற்கு திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமத்தால் இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு அரசின் இறுதி ஒப்புதலுக்காக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி முழுமைத்திட்டத்தில் மாநகராட்சி எல்கைக்குள் உள்ள அனைத்து நிலங்களின் தற்போதைய மற்றும் பிற்கால உத்தேச நிலப் பயன்பாடு குறிப்பிடப்பட்டுள்ளது. முதன்மைக்குடியிருப்பு, கலப்பு குடியிருப்பு, வணிகப் பயன்பாடு, தொழிற்சாலைப் பயன்பாடு, கட்டுப்படுத்தப்பட்ட தொழிற்சாலை, பொதுப் பயன்பாடு, போக்குவரத்து பயன்பாடு, விவசாயப் பயன்பாடு என நிலங்களை வகைப்பாடு செய்து உள்ளூர் திட்டக்குழுமமும், மாநகராட்சியும் மேற்படி திட்டத்தை அமுல்படுத்தி வருகின்றது.

### நகரமைப்பு திட்டங்கள்

காற்றோட்டமாக, சுகாதாரமான வாழ்விற்கு வழிவகுக்கும் வகையில் நகரை திட்டமிட்ட வழியில் அபிவிருத்தியடையச் செய்யும் நோக்கோடு இந்நகரில் கீழ்க்கண்ட விவரப்படி 62 நகரமைப்புத் திட்டங்கள் திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமத்தால் தயார் செய்யப்பட்டுள்ளன. இவைகளில் 35 விரிவு அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டும், விரிவு அபிவிருத்தி திட்டங்களுக்கு இசைவு அளிக்கப்பட்டும், விரிவு அபிவிருத்தி திட்டங்கள் வரைவு நிலையிலும் உள்ளவைகளை மாநகராட்சியில் அமுல்படுத்தப்படுகின்றது.

### நகரமைப்புத் திட்டங்களின் நிலை குறித்த விபரம் :

| உள வ.எண். | திட்டத்தின் பெயர் | ஒப்புதல் பெற்ற விபரம் |
|---|---|---|
| 1. | பேட்டை நகரமைப்புத் திட்டம் பாகம் 1 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 2. | பேட்டை நகரமைப்புத் திட்டம் பாகம் 2 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 3. | சுத்தமல்லி நகரமைப்புத் திட்டம் பாகம் 1 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 4. | சுத்தமல்லி நகரமைப்புத் திட்டம் பாகம் 2 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 5. | சுத்தமல்லி நகரமைப்புத் திட்டம் பாகம் 3 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 6. | பழைய பேட்டை நகரமைப்புத் திட்டம் | ஒப்புதல் பெறப்பட்டது |
| 7. | நரசிங்கநல்லூர் நகரமைப்புத் திட்டம் | ஒப்புதல் பெறப்பட்டது |
| 8. | திருநெல்வேலி டவுண் ரெயில்வேபீடர் ரோடு நகரமைப்புத் திட்டம் | ஒப்புதல் பெறப்பட்டது |

| | | |
|---|---|---|
| 9. | குட்டக்கரை நகரமைப்புத் திட்டம் | ஒப்புதல் பெறப்பட்டது |
| 10. | சுவாமி நெல்லையப்பர் நெடுஞ்சாலை விரிவு அபிவிருத்தித் திட்டம் | ஒப்புதல் பெறப்பட்டது |
| 11. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.1 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 12. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.2 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 13. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.3 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 14. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.4 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 15. | பெருமாள்புரம விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.5 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 16. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.6 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 17. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.7 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 18. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.8 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 19. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.9 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 20. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.10 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 21. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.11 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 22. | ஹைகிரவுண்ட் ஏரியா நகரமைப்புத் திட்டம் எண்.1 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 23. | இலந்தகுளம் ஏரியா நகரமைப்புத் திட்டம் | ஒப்புதல் பெறப்பட்டது |
| 24. | வண்ணார்பேட்டை பாளையங்கோட்டை நெடுஞ்சாலை நகரமைப்புத் திட்டம் எண்.1 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 25. | வண்ணார்பேட்டை பாளையங்கோட்டை நெடுஞ்சாலை நகரமைப்புத் திட்டம் எண்.2 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 26. | மேலப்பாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.1 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 27. | மேலப்பாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.2 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 28. | மேலப்பாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.3 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 29. | மேலப்பாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.4 | இசைவு அளிக்கப்பட்டது |
| 30. | மேலப்பாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.5 | இசைவு அளிக்கப்பட்டது |
| 31. | மேலப்பாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.6 | இசைவு அளிக்கப்பட்டது |
| 32. | தச்சநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.1 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 33. | தச்சநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.2 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 34. | தச்சநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.3 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 35. | தச்சநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.4 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 36. | தச்சநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.5 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 37. | தச்சநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.6 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 38. | வண்ணார்பேட்டை பெருவழி விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.1 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 39. | வண்ணார்பேட்டை பெருவழி விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.2 | இசைவு நிலை |
| 40. | சிந்துபூந்துறை விரிவு அபிவிருத்தி திட்டம் | ஒப்புதல் பெறப்பட்டது |
| 41. | உடையார்பட்டி விரிவு அபிவிருத்தி திட்டம் | ஒப்புதல் பெறப்பட்டது |
| 42. | ரஹ்மத்நகர் விரிவு அபிவிருத்தி திட்டம் | ஒப்புதல் பெறப்பட்டது |
| 43. | இராஜகோபாலபுரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.1 | இசைவு நிலை |
| 44. | இராஜகோபாலபுரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.2 | இசைவு நிலை |
| 45. | இராஜகோபாலபுரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.3 | இசைவு நிலை |
| 46. | சிவனடியார்குளம் விரிவு அபிவிருத்தி திட்டம் | இசைவு நிலை |
| 47. | நடுக்காமுடையார்குளம் விரிவு அபிவிருத்தி திட்டம் | வரைவு நிலை |
| 48. | வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.1 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 49. | வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.2 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 50. | வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.3 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 51. | வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.4 | ஒப்புதல் பெறப்பட்டது |

52. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.5 ஒப்புதல் பெறப்பட்டது
53. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.6 ஒப்புதல் பெறப்பட்டது
54. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7 ஒப்புதல் பெறப்பட்டது
55. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.8 ஒப்புதல் பெறப்பட்டது
56. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.9 ஒப்புதல் பெறப்பட்டது
57. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.10 வரைவு நிலை
58. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.11 வரைவு நிலை
59. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.12 வரைவு நிலை
60. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.13 வரைவு நிலை
61. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.14 வரைவு நிலை
62. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.15 வரைவு நிலை

மேற்படி திட்டங்களில் தற்சமயம் குடியிருப்பு, வணிகப் பயன்பாடு, தொழிற்சாலைப் பயன்பாடு, பொது ஒதுக்கீடு, கல்விப் பயன்பாடு, போக்குவரத்து, விவசாயப்பகுதி மற்றும் திறவிடங்களில் உள்ள நிலங்களை கணக்கிட்டு மீதமுள்ள காலியாக உள்ள நிலங்களில் நகரமைப்புத் திட்ட நெறிமுறைகளின்படி மேற்கண்ட அனைத்து நிலப் பயன்பாடுகளுக்கும் பிற்கால மக்களின் தேவையைக் கருதி அதற்கேற்றவாறு திட்டத்தில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிலமும் திட்டத்தில் குறிப்பிட்டபடி அவ்வகை நிலப் பயன்பாடாகத்தான் அபிவிருத்தியடைதல் வேண்டும். உள்ளூர் திட்டக்குழுமம் தயார் செய்யும் இத்திட்டங்களை திருநெல்வேலி மாநகராட்சி அமுல்படுத்தி வருகிறது.

## புதிய பேருந்து நிலையம்

திருநெல்வேலி சந்திப்பில் (Junction) 4 ஏக்கர் பரப்பில் உள்ள மத்தியப் பேருந்து நிலையத்தை தற்காலத் தேவைக்கேற்ப சீர்மிகு நகரம் (Smart City) திட்டத்தின் கீழ் 78.00 கோடி மதிப்பீட்டில் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருகின்றது. மேலும் மேற்படி பேருந்து நிலையத்தில் ஏற்பட்ட நெரிசல், போக்குவரத்து இடையூறுகளை தவிர்க்கும் பொருட்டு புதிய மத்தியப் பேருந்து நிலையம் ஒன்றினை மேலப்பாளையம் வார்டு பகுதியில் குலவணிகர்புரம் கிராமம் சர்வே எண். 982/3 வெயிலுகந்தான்குளம் புறம்போக்கில் 15 ஏக்கர் நிலத்தை அரசிடமிருந்து நிலத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட நிலமதிப்பு தொகை ரூ.1,46,83,200/ஐ செலுத்தி உரிமை மாற்றம் பெற்று பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கடந்த 13.3.2003 அன்று திறந்து வைக்கப்பட்டு கடந்த 16 ஆண்டு காலமாக நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது.

**கட்டிட உரிமையாணை வழங்குதல்**

அரசு தெரிவித்த அறிவுரைகளின்படி 1.9.97 முதல் மாநகராட்சி எல்லைக்குள் இருந்து பெறப்படும் அனைத்துக் கட்டிட மனைப்பிரிவு, மனை உட்பிரிவு, இயந்திர நிறுவனம் போன்ற மனுக்களை ஆய்வு செய்து ஆணையர் மற்றும் உரிய பிற துறைகளின் முன் அனுமதி பெற்று திட்டப்பிரிவு மூலம் உரிமையாணைகள் வழங்கப்பட்டு வந்தது. தற்போது கடந்த 28.8.2002 முதல் ஆகஸ்ட் 2015 வரையிலும் 1500 ச.அடிக்குள் அமையும் குடியிருப்புகளுக்கு அந்தந்த வார்டு அலுவலகங்களிலேயே அனுமதி வழங்கவும், அதற்கு மேற்பட்ட பரப்பளவுள்ள குடியிருப்புகள் மற்றும் ஏனைய உபயோகங்களுக்கு அந்தந்த வார்டு அலுவலகங்களின் மூலம் மனுக்களை பெற்று வார்டு உதவி ஆணையாளர்களின் குறிப்புடன் செயற் பொறியாளர் (திட்டம்) மற்றும் ஆணையர் ஆகியோரின் உத்தரவு பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது மேற்படி வார்டு பகுதிகளில் நகரமைப்பு பணிகளை வார்டு அலுவலகங்களில் பணிபுரியும் உதவி/ இளநிலைப் பொறியாளர்கள் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி ஆணையாளர் அவர்களின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டு, மைய அலுவலக திட்டப்பிரிவு மூலம் நகரமைப்பு பணிகள் அனைத்தும் ஆணையாளர் மூலம் செயல்படுத்தப்பட்டது, பின்னர் அலுவலக ஆணை எண் 08/2017 (ந.க.எண் சி1-6403-2015 )நாள் 27.10.2017-ன்படி நகரமைப்பு பணிகள் அந்தந்த மண்டல அலுவலகத்தில் கவனிக்கப்பட்டு 1500 ச.அடிக்குள் அமையும் குடியிருப்புகளுக்கு அந்தந்த வார்டு அலுவலகங்களிலேயே இணையதளத்தின் மூலம் விண்ணப்பித்து அனுமதி வழங்கவும், அதற்கு மேற்பட்ட பரப்பளவுள்ள குடியிருப்புகள் மற்றும் ஏனைய உபயோகங்களுக்கு அந்தந்த வார்டு அலுவலகங்களில் விண்ணப்பங்கள் இணையதளத்தின் மூலம் பெற்று வார்டு உதவி ஆணையாளர்களின் குறிப்புடன் செயற் பொறியாளர் (திட்டம்) மற்றும் ஆணையர் ஆகியோரின் அனுமதி கணனியில் பதிவேற்றம் செய்து உத்தரவு வழங்கப்பட்டு வருகின்றது.

**திருநெல்வேலி மாநகராட்சி சட்டம் 283-ன் கீழ் அபராதம் விதிப்பு**

அனுமதிக்கு மாறாகவும், அனுமதியின்றியும் கட்டப்படும் கட்டிடங்களுக்கு திருநெல்வேலி மாநகராட்சி சட்டம் 283-வது பிரிவின் கீழ் ஒவ்வொரு அரையாண்டும் 9 ச.மீக்கு ரூ.50 வீதம் அபராதம் விதிக்கப்பட்டு வருகின்றது. மேற்படி அபராதத் தொகையை அந்தக் கட்டிடத்திற்கு அனுமதி பெறப்படும் வரை ஒவ்வொரு அரையாண்டுக்கும் சொத்து வரி வசூலிக்கும்போது சேர்த்து வசூலிக்கப்படுகிறது.

## முறைப்படுத்துதல் திட்டம்

### மனைப்பிரிவு

அரசு வழிகாட்டுதலின்படி திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் 356 அனுமதியற்ற மனைப்பிரிவுகள் திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமத்திலிருந்து ஒப்புதல் பெறப்பட்டு, அவற்றின் ஒவ்வொரு உரிமையாளரையும் அணுகி அரசு ஆணையை விளக்கி விண்ணப்பிக்க தெரிவித்து அதில் அனைத்து மனைப்பிரிவுகளில் உள்ள மனைகளுக்கு உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தவர்களுக்கு மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவு முறைப்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

### மனைகள் முறைப்படுத்துதல் திட்டம் 2006 :

தற்போது வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண் : 59 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை) நாள் : 25.07.2006 ன்படி திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிக்குள் அனுமதியற்ற மனைப்பிரிவில் 25.07.2006க்கு முன்னர் மனைகளை கிரையம் பெற்றுள்ள மனை உரிமையாளர்களை அணுகி அரசு ஆணையை குறித்து தெளிவாக எடுத்துரைத்து தங்களது மனைகளை முறைப்படுத்திக் கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி 31.12.2006 வரையிலும் மொத்தமுள்ள 68 அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் உள்ள 5178 மனைகளில் 1802 மனைகள் முறைப்படுத்தப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மாநகராட்சிக்கு ரூ.2.20கோடி வருவாய் ஏற்பட்டுள்ளது. அரசாணை எண்.56 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை) நாள் : 30.04.2007 ன்படி 698 மனைகள் முறைப்படுத்தப்பட்டு மாநகராட்சிக்கு ரூ.1.01 கோடி வருவாய் ஏற்பட்டுள்ளது. அதன் பின்னர் கடைசியாக அரசாணை எண்.244 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை) நாள் : 05.12.2008ன்படி 512 மனைகள் முறைப்படுத்தப்பட்டு மாநகராட்சிக்கு ரூ.68.00 இலட்சம் வருவாய் ஏற்பட்டுள்ளது.

### அனுமதியற்ற மனைப்பிரிவு/தனிமனைகள் வரன்முறைப்படுத்துதல்:

தற்போது வெளியிடப்பட்டுள்ள G.O.(MS).No.78, Housing and Urban Development department dated 04.5.2017 & G.O.(Ms) No.172, Housing and Urban Development (UD4(3)) department, dated 13.10.2017-ன்படி திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிக்குள் அனுமதியற்ற மனைப்பிரிவு மற்றும் தனிமனைகளுக்கு வரன்முறைப்படுத்த ரூ.500/--னை கூராய்வுக்கட்டணம் செலுத்தி, திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுத்தில் விண்ணப்பிக்கப்படுகிறது. திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமத்தால் வரன்முறைப்படுத்தப்படுகிறது. வரன்முறைப்படுத்தப்பட்ட மனைகளுக்கு, மனையின் பரப்பளவிற்கு ச.மீட்டருக்கு ரூ150/-வீதம் வரன்முறைக்கட்டணம் அரசு

கணக்கிலும் மற்றும் மேம்பாட்டுக்கட்டணம் ரூ500/-வீதம் மாநகராட்சி கருவூலகத்திலும் செலுத்தி அனுமதியற்ற மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**புதிய திட்டங்கள்**

**மழைநீர் சேகரிப்பு**

அரசு கடந்த 2002-ம் ஆண்டு அனைத்துக் கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என அறிவித்ததைத் தொடர்ந்து இம்மாநகராட்சியில் திட்டப்பிரிவு அதனைத் தலையாய கடமையாகக் கொண்டு மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து கட்டிடங்களிலும், அரசு கடடிடங்களிலும் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. நடைபெற்று வரும் கட்டிடங்களுக்கு மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பு ஏற்படுத்த தீவிர கண்காணிப்பும் செய்யப்பட்டு வருகின்றது. தொடர்ந்து மேற்படி திட்டம் முழுமுச்சுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு இருந்தாலொழிய எந்த கட்டிடத்திற்கும் அனுமதி வழங்கப்படுவதில்லை.

**சூரிய ஒளி வெப்பம் மூலம் தண்ணீர் சூடாக்கும் கருவி**

மின் சிக்கனத்தை கடைப்பிடிக்கும் வகையில் அரசு அறிவித்தபடி சூரிய ஒளி வெப்பம் மூலம் தண்ணீர் சூடாக்கும் கருவி அமைக்க வேண்டும் என பெரிய குடியிருப்புக் கட்டிடங்கள், தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், வளாகங்கள், மருத்துவமனைகள் ஆகியவைகளுக்கு நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டு தற்போது கட்டி முடித்த ஒரு சில கட்டிங்களில் அமைக்கப்பட்டுள்ளது. அதனை திட்டப்பிரிவு மூலம் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**பொது உபயோகக் கட்டிடங்கள்**

அனைத்துப் பள்ளி கட்டிடங்கள் மற்றும் பிற பொது உபயோகக் கட்டிடங்களான திருமண மண்டபங்கள், கல்வி கட்டிடங்கள், மருத்துவமனைகள், தொழிற்கூடங்கள், வணிக வளாகம், திட்ட விதிகள், வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகள் அனைத்து விதிகளையும் திருப்தி செய்யும் வகையில் கட்டப்பட்டுள்ளதா? என இத்திட்டப்பிரிவு மூலம் கணக்கெடுப்பு மற்றும் கண்காணிக்கப்படுகின்றது.

**இணைப்புச்சாலை :**

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் வார்டு, அங்கீகரிக்கப்பட்ட சுவாமி நெல்லையப்பர் நெடுஞ்சாலை விரிவு அபிவிருத்தித் திட்டம் 60 அடி அகல ஏ4ஏ4 மற்றும் டி3டி3 டி4டி4 50 அடி

அகல திட்டச்சாலை போக்குவரத்து செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் அமைக்க நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் ரூ.1 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு நிலம் கையகப்படுத்த நடவடிக்கையில் உள்ளது. மொத்த மதிப்பீடு தொகை ரூ.1 கோடிக்கு 50 சதவீதத் தொகை நகர் ஊரமைப்பு அபிவிருத்தி திட்டத்திலிருந்து மானயமாக வழங்கப்படுகின்றது. மீதம் 50 சதவீதத் தொகை மாநகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ளப்படும். இந்த சாலை அமையும் இடத்தில் உள்ள் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு சொந்தமான இடத்தினை அரசு நிர்ணயிக்கும் தொகைக்குத் தர இந்து அறநிலையத் துறை ஆணையர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நில ஆர்ஜிதம் தொடர்பாகவும், அரசின் நிர்வாக அனுமதி பெற்று, பொது மக்களின் நலனை கருத்திற்கொண்டு, போக்குவரத்து சீர் செய்யப்பட்டு மேற்படி திட்டச்சாலை அமைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி இணைப்புச்சாலைக்கு திருத்திய நில விபரப்பட்டியல் (Land Plan Shedule) தக்க மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திருநெல்வேலி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சாலையமைக்க தேவையான நிலங்களை தனியார் பேச்சுவார்த்தைக்குழு மூலம் நிலங்களை கையகப்படுத்தி தருமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருநெல்வேலி அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. நில உரிமையாளர்களுடன் நிலமதிப்புத்தொகை தொடர்பான கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் 13.2.2018 பிற்பகல் 5.00 நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட காலத்திலும், நிலத்தில் முன்நுழைவு செய்யப்பட்ட காலத்திலும், தற்போதும் உள்ள நில உடமைதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையினை அரசிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டவுடன் வழங்க மாமன்றம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

Narayana 30.7.2020

செயற் பொறியாளர்(திட்டம்)
திருநெல்வேலி மாநகராட்சி

30/7/2020 30.7.2020

# பொது சுகாதாரம்
# 2019 - 2020

தமிழக அரசின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர், சென்னை அலுவலகம் மூலம் மாநகரநல அலுவலர் அயற்பணி அடிப்படையில் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றார். இப்பிரிவில் 4 சுகாதார அலுவலர்கள், 10 சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் 6 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு சம்பந்தமான பணிகளுக்கு நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றார்கள்.

01.04.2019 முதல் 04.112019 முடிய திருமதி.பெ.விஜயலெட்சுமி ஆணையாளராகவும், 05..11.2019 முதல் 31.03.2019 முடிய திரு.க.கண்ணன், ஆணையாளராகவும் பதவி வகித்தனர்.

நிர்வாக வசதிக்காக இம்மாநகராட்சியினை பொது சுகாதாரத்திற்காக 17 அலகுகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அலகிற்கும் ஒரு சுகாதார ஆய்வாளரின் மேற்பார்வையின் கீழ் பொது சுகாதாரப் பணி நடைபெற்று வருகின்றது.

**திடக்கழிவு மேலாண்மை:**

நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000-ஐ பின்பற்றி மாநகரப் பகுதியில் சேரும் குப்பைகளை முழுமையாக அகற்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மூன்று சக்கர மிதி வண்டிகள் மற்றும் BOV வாகனங்கள் மூலம் வீடுவீடாகச் சென்று குப்பைகளை பிரித்து வாங்கி அவைகளை ஓர் இடத்தில் சேகரித்து, பின்னர் அங்கிருந்து லாரிகள் மூலம் இராமையன்பட்டி உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகின்றது..

சேகரிக்கப்பட்டுள்ள குப்பைகளை ஓர் இடத்தில் கொட்டுவதற்கு மாநகரப் பகுதியில் 157 இரும்புத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது திடக்கழிவு மேலாண்மைப் பணியில் கீழ்க்கண்ட வாகன வசதிகளைக் கொண்டு குப்பைகள் அப்புறப்படுத்தப்படுகின்றன.

| | |
|---|---|
| 1. லாரிகள் | 2 |
| 2. டிராக்டர் | 1 |
| 3. டிப்பர் லாரிகள் | 13 |
| 4. மண் தோண்டும் இயந்திரம் | 2 |
| 5. டம்பர் பிளேசர் லாரி | 4 |
| 7. காம்பாக்டர் லாரி | 4 |
| 8. டாடா ACE ஆட்டோ | 1 |

திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் நாள்தோறும் 170 மெ.டன் குப்பை உருவாகின்றது. தற்பொழுதுள்ள குறைந்த எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் வாகன வசதிகளைக் கொண்டு நாள்தோறும் 140 மெ.டன் குப்பை

அப்புறப்படுத்தப்படுகிறது. 40 மெ.டன் அளவிலான மட்கும் குப்பைகள் நுண்உரமாக்கும் மையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு உரமாக்கப்படுகிறது. மீதமுள்ள குப்பைகள் உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகின்றது. வீடுவீடாகச் சென்று குப்பைகளை சேகரிக்க மேலும் 270 பேட்டரி வண்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மாநகரின் முக்கிய சந்திப்பு, பிரதான இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெரிய இரும்பு குப்பை தொட்டிகள் நிரம்பிய உடன் அப்புறப்படுத்தும் வகையில் கால அட்டவணை தயார் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபட்டுள்ள துப்புரவுப் பணியாளர்களுக்கு சீருடை, காலணிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதன்கிழமை தோறும் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் பொருட்கள், துகள்களாக ஆக்கப்பட்டு, அவை மாநகர பகுதியின் தார்ச்சாலை போடுவதற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இது தவிர குப்பைகளை வீடுவீடாகச் சென்று பிரித்து வாங்கும் பணியில் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 744 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு அப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

துப்புரவுப் பணியினை மேலும் சிறப்புற மேற்கொள்ளும் பொருட்டு மாநகரப் பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும், வார்டு வரிசை கிரமமாக கூட்டுத் துப்புரவுப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணி பிரதி வாரம் ஒரு வார்டில் அந்தந்த மண்டலத்திலுள்ள அனைத்து துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது. இப்பணியின் போது கழிவுநீர் ஓடை சுத்தம் செய்தல், நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமல் உள்ள சுகாதாரம் சம்பந்தமான பிரச்னைகளுக்கு தீர்வு காணுதல் முதலானவை மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் வார்டு பகுதியின் சுகாதாரம் மேம்படுகின்றது.

40 இடங்களில் நுண்உரக்குடில்கள் ஏற்படுத்தப்பட்டு வீடுகளிலிருந்து வரும் மட்கும் குப்பை உரமாக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கும். பொது மக்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் மூலம் 28 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒரு ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் ஆட்கொணர்வு ஏஜென்ஸி மூலம் நியமிக்கப்பட்டு, பொது மக்களுக்கு மாநகராட்சி சேவைகள், நோய் தடுப்பு, திடக்கழிவு மேலாண்மை ஆகியவை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அச்சம் மற்றும் அருவருக்கத் உரிமங்கள்:

திருநெல்வேலி மாநகராட்சி சட்டம் 1994 உபவிதிகள் செம்மையாக்கப்பட்டு தேவையான இடங்களில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான உரிமையானை கட்டணம் மூலம் நடப்பு ஆண்டில் ரூ.30,65,733/- வருமானம் மாநகராட்சிக்கு வந்துள்ளது.

சந்தைகளும் விழாக்களும்:

ஆண்டு தோறும் வழக்கமாக நடைபெறும் அருள்தரும் சுவாமி நெல்லையப்பர் மற்றும் காந்திமதி அம்மாள் திருக்கோயில் தேர்த்திருவிழா ஜுலை 2018-ல் நடந்தேறியது. நான்கு ரதவீதிகளில் தேவையான சுகாதார பணிகள் பொது மக்களுக்கு செய்து தரப்பட்டன. முக்கிய இடங்களில் மாநகராட்சி மூலம் பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் லாரி கொண்டு குடிநீர் விநியோகம் செய்து தரப்பட்டது. பொது மக்களுக்கு மருத்துவ உதவி செய்யும் பொருட்டு முகாம்கள் அமைக்கப்பட்டன.

நகர்நலத் திட்டம் மற்றும் தாய்சேய் நலத்திட்ட பணியாளர்கள் எண்ணிக்கை:

| | | |
|---|---|---|
| பெண் மருத்துவ அலுவலர்கள் | 8 | |
| ஆண் மருத்துவ அலுவலர்கள் | 1 | |
| பொது மருத்துவர் | 1 | (Included in the above 8) |
| சித்த மருத்துவர்கள் | 2 | |
| பகுதி சுகாதார செவிலியர்கள் | 7 | |
| சுகாதார செவிலியர்கள் | 5 | |
| நகரசுகாதார செவிலியர்கள் | 22 | |
| மருந்தாளுநர்கள் | 2 | |
| நான்காம் நிலை ஊழியர்கள் | 26 | |

இப்பணியாளர்களுக்கு ஆண்டு தோறும் சம்பளம் ரூ.6,50,35,855/- செலவழிக்கப்படுகின்றது. இவைகளில் நகர்நல மையங்களில் 14 பணியிடங்களுக்கான ஊதியம், குடும்ப நலத்துறை இயக்குநர், சென்னை அவர்களால் 2:1 மானியமாக வழங்கப்படுகின்றது.

தாய் சேய் நலத் திட்டத்தின் சாதனைகள் :

| | | |
|---|---|---|
| 1. | கர்ப்பிணி தாய்மார்கள் பதிவு செய்தல் | 5718 |
| 2. | கர்ப்பிணி தாய்மார்களுக்கு இசிவு நோய் தடுப்பூசி | 5718 |
| 3. | நடைபெற்ற பிரசவங்கள் | 5199 |
| 4. | காசநோய் தடுப்பூசி | 5199 |
| 5. | முத்தடுப்பூசி | 5232 |
| 6. | போலியோ நோய்த்தடுப்பு சொட்டு மருந்து | 5199 |
| 7. | தட்டம்மை தடுப்பூசி | 5099 |
| 8. | இருமனை தடுப்பூசி குழந்தைகளுக்கு | 7850 |
| 9. | வைட்டமின் ஏ மருந்து | 38720 |

குடும்ப நலத்திட்ட சாதனைகள் :

1. குடும்ப நல அறுவை சிகிச்சைகள் 2973
2. கருத்தடை வளையங்கள் பொருத்துதல் 6920
3. வாய்வழி மாத்திரைகள் 1334
4. நிரோத் 3326

ஒவ்வொரு குடும்ப நலமையமும் சராசரியாக 50,000 மக்கட் தொகைகள் உள்ளடக்கி பணியாற்றி வருகின்றது. குடும்ப நலம் மற்றும் தாய் சேய் நல பணியாளர்கள் மக்கள் தொக்கை கணக்கெடுப்பு செய்து, தகுதி வாய்ந்த தம்பதியர் குறிப்பேடுகள் தயார் செய்து குடும்ப நலப்பணி செய்து வருகின்றார்கள்.

எல்லா பெண் மருத்துவ அலுவலர்களுக்கும், குடும்ப நல அறுவை சிகிச்சை செய்வதற்கும், கருத்தடை வளையம் பொருத்துவதற்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் எல்லா பகுதி சுகாதார செவிலியர்கள் மற்றும் நகரசுகாதார செவிலியர்களுக்கு கருத்தடை வளையம் பொருத்துவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பள்ளிக்குழந்தைகளுக்கும் ஆகஸ்ட் 2019 மாதத்தில் குடல்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்பட்டது. மேலும் மாநகராட்சி நகர்நல மையங்களில் மகப்பேறு தாய்மார்களுக்கு Ultra Scan மற்றும் பரிசோதனைகள் எடுக்கப்படும்.

தாய் சேய் நலம் மற்றும் குடும்ப நலத்துறையின் கீழ் பணியாற்றும் பணியாளர்கள் அன்றாடம் வீடு வீடாக சென்று தாய் சேய் நலம் மற்றும் குடும்ப நலம் பற்றி எடுத்துக் கூறி வருகின்றனர். தகுதி வாய்ந்த தம்பதியரை சந்தித்து குடும்ப நல முறைகள் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறி மாத்திரை முறை மற்றும் நிரோத் முறைகள் பற்றி தனித்தனியாகவும், குழுக்களாகவும் தாய்மார்களை சந்தித்து எடுத்துக் கூறி வருகின்றனர்.

குடும்ப நலத்திட்டத்தின் சாதனைகள் :

| | | |
|---|---|---|
| 1 | 2011-12ம் ஆண்டு மாநகராட்சியின் மக்கட்தொகை<br>2011 Census- படி மற்றும் 2018-ல் மக்கட் தொகை | 474838<br>518855 |
| 2 | குடும்ப நலத்துறையின் பணியாளர்களின் பணி செய்யும் மக்கட்தொகை | 518855 |
| 3 | தகுதி வாய்ந்த தம்பதியரின் எண்ணிக்கை | 77647 |
| 3அ | குடும்ப நல முறைகளை ஏற்றுக்கொண்ட தகுதி வாய்ந்த தம்பதியரின் எண்ணிக்கை | 49553 |
| 4. | அறுவை சிகிச்சை முறை | 2973 |
| 5 | கருத்தடை வளையம் | 6920 |
| 6 | வாய்வழி மாத்திரை | 1334 |
| 7 | நிரோத் | 38326 |

தற்போது தேசிய சுகாதார இயக்கம் மூலம் மாநகராட்சியில் செயல்பட்டு வந்த நகர்நல மையங்கள், மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களை ஒன்றாக இணைத்து 9

நகர்புற ஆரம்ப சுகாதார மையங்களாக உருவாக்கப்பட்டு கீழ்காணும் விபரப்படி ஜனவரி 2015 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் 50000 மக்கள் தொகை உள்ளடக்கி செயல்பட்டு வருகின்றது.

| வ.எண் | நகர்புற ஆரம்ப சுகாதார மையம் பெயர் | முகவரி |
|---|---|---|
| 1 | பேட்டை நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | பேட்டை |
| 2 | பழைய பேட்டை நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | பழைய பேட்டை |
| 3 | பாட்டபத்து நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | தொட்டி பாலத்தெரு பாட்டபத்து |
| 4 | எம்.வி.புரம் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | மேலவீரராகவபுரம் திருநெல்வேலி சந்திப்பு |
| 5 | கொக்கிரகுளம் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | சாலைத்தெரு வண்ணார்பேட்டை |
| 6 | சமாதானபுரம் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | மனகாவலம்பிள்ளை மருத்துவமனை பாளையங்கோட்டை |
| 7 | பாளையங்கோட்டை நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | பாளை பேருந்து நிலையம் அருகில் |
| 8 | பெருமாள்புரம் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | பெருமாள்புரம் |
| 9 | மேலப்பாளையம் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | மேலப்பாளையம் மண்டல அலுவலக வளாகம் |

மேற்படி தேசிய நகர்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான மருந்துகள் மற்றும் தளவாடச்சாமான்கள் வாங்குவதற்கு தேவையான நிதி தேசிய நகர்ப்புற சுகாதார இயக்ககம் மூலமாக வழங்கப்படுகிறது.

புதிய பேருந்து நிலையம், பாளை பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் ஆகியவற்றில் தாய்மார்கள் பச்சிளம் குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்கு ஏதுவாக பாலூட்டும் அறைகள் திறக்கப்பட்டு அருகில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் 3 மாதத்திற்குள் பதிவு செய்து, தாய் சேய்நல எண் (RCH-ID) பெறும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்படுகிறது. மேலும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு Child Care Kit இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நோய் தடுப்பூசி திட்டம்:

தேசிய தடுப்பூசி திட்டத்தின் கீழ் அனைத்து தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆறு விதமான உயிர் கொல்லி நோய் வராமல் தடுப்பதற்கு தடுப்பூசிகள் கொடுக்கப்பட்டு வருகின்றது.

கீழ்க்கண்ட தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றது :

| வ. எண் | தடுப்பூசி வகைகள் | தடுப்பூசி போடப்படும் காலங்கள் |
|---|---|---|
| 1 | பிசிஜி மற்றும் ஜிரோ போலியோ (BCG, OPV-o, Hepatitis B Birth dose) | குழந்தை பிறந்த உடன் போடப்படுகின்றது |
| 2 | Pentavalent – 1, OPV 1, Rota 1 & TPV -1 | குழந்தை பிறந்த 6வது வாரம் |
| 3 | இளம்பிள்ளை வாத நோய் சொட்டு மருந்து | 10வது வாரம் |
| 4 | OPV 3 Pentavalent 3, Rota 3, TPV 2 | 14 வாரம் |
| 5 | Measles (mcv 1) or MR-1, PCV – B | குழந்தைகளுக்கு 9வது மாதம் முதல் 12வது மாதம் வரை |
| 6 | Measles (mcv 2) or MR-2, DPT-2, OPV-3 | 16வது மாதம் முதல் 24 மாதம் வரை |
| 7 | DPT 132 | 5-6வது வயதில் |
| 8 | இசிவு நோய் தடுப்பூசி (வுவு) | குழந்தைகளுக்கு 10 வயதிலும், 16 வயதிலும் |
| 9 | இசிய நோய் தடுப்பூசி கர்ப்பிணி தாய்மார்களுக்கு | கர்ப்பமான 4வது மாதம் முதல் 5வது மாதத்தில் 2 ஊசிகள் |
| 10 | வைட்டமின் ஏ சொட்டு மருந்து | குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ சத்து குறைவினால் ஏற்படும் மாலைக்கண் நோயை தடுப்பதற்கு 6 மாதம் முதல் 5 வயது வரை 6 மாத இடைவெளியில் |
| 11 | இரும்புசத்து மாத்திரைகள் | இரும்பு சத்து குறைவினால் குழந்தைகளுக்கும். தாய்மார்களுக்கும் ஏற்படும் சோகை நோயை தடுப்பதற்கு கொடுக்கப்பட்டுள்ளது. |
| 12 | குடற்புழு நீக்க மாத்திரைகள் | 1 வருடம் முதல் 19 வயது வரை குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது |

தெருநாய்:

திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் தெருவில் சுற்றித் திரியும் நாய்களை பிடித்து கருத்தடை செய்யப்பட்டு வருகின்றது. 31.03.2019 முடிய 1574 நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டு வெறிநோய் தடுப்பூசியும் போடப்பட்டு வருகின்றனது. .இதன்மூலம் நாய்களின் இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கொசு தடுப்பு நடவடிக்கைகள் :

கொசு தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு சுகாதார ஆய்வாளர் பொறுப்பு நிர்ணயம் செய்யப்பட்டு மாநகர பகுதிகளில் நிலையான கொசு புழு உற்பத்தி ஆகும் இடங்கள் கண்டறியப்பட்டு அவற்றினை ஒழிக்க முன்பயணத்திட்டம் தயார் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. இப்பணிக்காக 62 கைத்தெளிப்பான்கள் மற்றும் 17 Pulse fogging இயந்திரங்களைக் கொண்டு சிறிய தெருக்களுக்கும், முக்கிய சந்துகளிலும் கொசு புகை மருந்து அடிக்கப்பட்டு வருகின்றது. மேலும் புகை மருந்து அடிக்கும் வாகனம் இரண்டு மூலம் கொசுபுகை மருந்து அடிக்கப்பட்டு வளர்ந்த கொசுக்கள் அழிக்கப்படுகின்றன. மேலும் டெங்கு

தடுப்பு பணிக்கு டெங்கு தடுப்பு களப்பணியாளர்கள் 300 வீடுகளை வாரம் ஒருமுறை ஆய்வு செய்து கொசுப்புழுக்களை கண்டறிந்து அழிக்கவும், கொசு உற்பத்தி ஆகும் இடங்களை அகற்றவும் பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் நியமிக்கப்பட்டு, டெங்குவால் இறப்பு நிகழ்வு தடுக்கப்பட்டுள்ளது.

பிறப்பு விகிதமும், தாய் சேய் நல உதவியும்:

| | |
|---|---|
| 2018-ம் ஆண்டின் பிறப்புகள் | 5199 |
| பிறப்பு விகிதம் | 9.6 |
| இறப்பு விகிதம் | 4.2 |
| சிசு மரண விகிதம் | 5. |
| மகப்பேறு மரணவிகிதம் | 100 |

இறப்பு விகிதமும் கொள்ளை நோய்களும்:

நடப்பு ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள இறப்புகள் 2198 ஆகும். இறப்பு விகிதம் 1000-க்கு 4.2 ஆகும். 439 பிறப்பு இறப்புகள் கண்டுபிடிக்க வீடுவீடாக சென்று விசாரணை நடத்தப்பட்டன.

டைபாய்டு காய்ச்சல்:

டைபாய்டு காய்ச்சல் வராமல் தடுப்பதற்கு எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது.

கொள்ளை நோய்:

கொள்ளை நோய்க்கு அறிகுறியான எலி செத்து விழுதல் நிகழவில்லை. எனவே மக்களை கொல்லும் கொள்ளை நோய் பரவவில்லை.

தொண்டை அடைப்பான் நோய்:

தொண்டை அடைப்பான் நோய் கண்டுள்ளதற்கான நிகழ்வுகள் எதுவும் இல்லை.

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 2019-2020

நகர்புறத்தில் ஏழைகள் அமைப்பு சாராபகுதி செயல்பாட்டில் உள்ளனர். அவர்களுக்கு பொருளாதார முன்னேற்றம், சுகாதார மேம்பாடு, சமூக அளவில் ஏற்படும் வன்முறை மற்றும் பாதுகாப்பற்ற நிலையை மாற்றுதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவை உருவாக்கவும், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் செயல்பட்டு வருகிறது.

மேலும் குடியிருப்பில் நலிவடைந்த நிலை, சமூகத்தில் நலிவடைந்த நிலை மற்றும் வேலையில் நலிவடைந்த நிலை ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவனவாகும். நகர்ப்புற ஏழ்மையிலே மிகவும் பாதிப்பிற்குள்ளான பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர், தாழ்த்தப்பட்டடோர், பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் இத்திட்டத்தின் இலக்கு மக்கள் ஆவர்.

நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கு உதவுதல் (**SUSV – Support to Urban Street Vendors**):

தெருவோர வியாபாரிகளுக்கு நிறுவனங்கள் மூலம் கடன் பெற வசதி செய்தல், சமூக பொருளாதாரம் குறித்த களஆய்வு செய்தல், அவர்களை பதிவு செய்தல் மற்றும் அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது போன்ற உதவிகளை செய்யும் நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு உதவுவதற்கான நகர்ப்புற திட்டங்கள் தயாரிக்க உதவுதல், வியாபாரத்திற்கான இடவசதி செய்வது ஆகும். மேற்கண்ட நடவடிக்கைக்காக ஒதுக்கீடு தொகை ரூ.6.40 லட்சம் ஆகும்.

நகரங்களில் வீடற்றோருக்கான உறைவிடம் (**Scheme for Urban Homeless**):

நகர்ப்புறங்களில் வறுமையில் வாடுபவர்களுக்கு அத்தியாவசியமான சேவைகளை அளிப்பதாகும். வீடற்றவர்கள் அதிகமாக இருக்கக்கூடிய இடங்களுக்கு மையமாகவும், வேலை செய்யும் இடத்திற்கு சென்றுவர ஏதுவாக இருக்கக்கூடிய இடங்களில் உறைவிடம் அமைக்கப்பட வேண்டும். சமூக பாதுகாப்பு உரிமைகள், உணவு, கல்வி மற்றும் நலவாழ்வு சேவைகள் ஆகியவைகள் அளிக்கும்படி பயனாளிக்கு ஏற்ப இடவசதிகள் இருக்க வேண்டும்.

பிரதான் மந்திரி மாத்ரு வந்தன யோஜனா மற்றும் டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம் (**PMMVY-MRMBS**)

. திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் .9 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகிறது. இப்பகுதியில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பதிவு செய்து, தாய்சேய் நல எண் (RCH ID பெற்ற) அனைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கும் 3வது (ரூ.2000) மற்றும் 6வது மாதத்தில் (ரூ.2000) இரண்டு தவணைகளாக ரூ.4000 வழங்கப்படும். மேலும் ரூ.2000 மதிப்புள்ள இரண்டு ஊட்டச்சத்து பெட்டகமும் வழங்கப்படும். அரசு மருத்துவமனைகளில் பிரசவம் நடைபெற்றால் அதற்கான ரூ.4000 மற்றும் குழந்தை பிறந்த பின்பு மூன்றாம் தவணை Penta & Polia, IPV 2, Rota போடப்பட்டிருந்தால் அதற்காக ரூ.4000 மற்றும் 9-12வது மாதத்தில் போடப்படும் தட்டம்மை தடுப்பூசி போடப்பட்டால் அதற்காக ரூ.2000 என மொத்தம் ரூ.18000 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் முழுத்தொகையும் முதல் இரண்டு பிரசவத்திற்கு மட்டுமே பொருந்தும். மூன்றாவது மற்றும் அதற்கு மேற்பட்ட பிரசவத்திற்கு முதல் தவணை ரூ.2000 மற்றும் ஊட்டச்சத்து பெட்டகம் மட்டுமே வழங்கப்படும். இத்திட்டத்தினால் சிசு இறப்பு விகிதம் மற்றும் மகப்பேறு மரண விகிதம் குறைகிறது. அனைத்து கர்ப்பிணி தாய்மார்களையும் எளிதாக கண்காணிக்கலாம்.

தனிநபர்வீட்டு கழிப்பிடம்: (IHHL)

இத்திட்டத்தின் மூலம் நகரங்களில் 4695 பயனாளிகளுக்கு வீட்டில் கழிப்பிடம் புதிதாக கட்ட ரூ.8000/- மான்யம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம் (JSY):

JSY திட்டம் என்பது Government Health Centre PHC, CHC, FRU District, Sub District, Medical College Hospital இவைகளில் பேறுகாலம் ஆகக்கூடிய தாய்மார்களுக்கும் ரூ.600/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் முதல் இரண்டு பேறுகாலத்திற்கு மட்டுமே இத்தொகை வழங்கப்படுகிறது. JSY தொகையினை பயனாளிகள் வங்கி கணக்கில் NFT மூலம் வரவு வைக்கப்பட்டு வருகிறது. 2019-2020ல் திருநெல்வேலி மாநகராட்சியில் 4 UPHC-களில் கீழ்க்கண்ட எண்ணிக்கையில் தாய்மார்கள் பயனடைந்து உள்ளனர்.

| | |
|---|---|
| பாளையங்கோட்டை | 11 |
| பேட்டை | 61 |
| மேலவீரராகவபுரம் | 26 |
| சமாதானபுரம் | 26 |
| மொத்த தாய்மார்களின் எண்ணிக்கை | 124 |

தேசிய நகர்ப்புற நலவாழ்வு இயக்கம் (NUHM):

தேசிய நகர்ப்புற நல்வாழ்வு திட்டத்தின் மூலம் ஒன்பது ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஒவ்வொரு மாதமும் 3 சிறப்பு மருதுதுவ முகாம் நடத்தப்படுகின்றது.

- இம்முகாமில் பொது மருத்துவம், கண் பரிசோதனை, கர்ப்பிணி பெண்களுக்கான சிறப்பு பரிசோதனை மற்றும் ஊட்டச்சதது மருத்துவம், குழந்தைகளுக்கான சிறப்பு பரிசோதனை மற்றும் ஊட்டச்சத்து மருத்துவம்,
- ஒவ்வொரு மாதமும் 9ம் தேதி மகப்பேறு சிறப்பு முகாம் நடைபெறுகின்றது. தடுப்பூசி திட்டம், பேறுகால மற்றும் குழந்தை நலத்திட்டம், மழைக்கால தொற்றுநோய்கள் வராமல் தடுத்தல், உயிர்கொல்லி நோய்கள் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரங்கள் செய்தல்
- அனைத்து பள்ளி குழந்தைகளுக்கும் நிலவேம்பு குடிநீர் வழங்குதல் மற்றும் நோய் எதிர்ப்பு சக்திக்கான மருந்துகள் வழங்குதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

அம்மா உணவகம்:

திருநெல்வேலி மாநகராட்சியில் 02.06.2013 முதல் 10 அம்மா உணவகங்கள் துவங்கப்பட்டு மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றது. அம்மா உணவகங்களில் இட்லி ஒன்று ரூ.1/-க்கும், சாம்பார் சாதம் ரூ.5/-க்கும், தயிர்சாதம் ரூ.3/-க்கும்

வழங்கப்படுகின்றது. நாளொன்றுக்கு ஒவ்வொரு அம்மா உணவகத்திலும் காலையில் 1200 இட்லியும், 300 சாம்பார் சாதம் மற்றும் 300 தயிர்சாதமும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அம்மா உணவகங்களில் உணவருந்துவோருக்கு R.O. Filter குடிநீரும், சுகாதாரமான உணவருந்தும் அரங்கமும் அமைக்கப்பட்டு வறுமையிலுள்ள மக்கள் பயன்பெறும் வசதி செய்யப்பட்டுள்ளது.

18/8/20

மாநகர நல அலுவலர்,
திருநெல்வேலி மாநகராட்சி.

18/8/2020

## கணக்கு பிரிவு

2019-20ம் ஆண்டு பலதரப்பட்ட கணக்குகளின் வரவு செலவு பற்றிய விபரம் கீழ்கண்டுள்ளவாறு உள்ளது.

| இனம் | வரவு ரூ. கோடியில் | செலவு ரூ. கோடியில் |
|---|---|---|
| பொது நிதி | 124.46 | 200.89 |
| ஆரம்ப கல்வி நிதி | 4.95 | 11.26 |
| குடிநீர் மற்றும் வடிகால் நிதி | 23.41 | 49.13 |
| **மொத்தம்** | **152.82** | **261.28** |

மானியங்கள் :

இம்மாநகராட்சி கணக்கில் அறிக்கை ஆண்டில் **ரூ.8659.50** இலட்சம் அரசு மானியம் கிடைக்கப்பெற்றுள்ளது. இது குறித்த விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### GRANT RECEIVED DETAILS 2019-20

| *S.No* | Name of the Scheme | Amount (Rs.) |
|---|---|---|
| | **INCOME GRANT** | |
| *1* | State Finance Commission 2019-20 | 49.76.73.104 |
| *2* | 14th Finance Commission ( 18-19 2nd inst. ) | 9,77,66,895 |
| *3* | Surcharge on Stampduty (Sep'18 to Jun'19) | 4,58,91,634, |
| *4* | TUFIDCO-INSENTIVE FUND | 16,81,340, |
| *5* | TUFIDCO- Dividend Share | 78,000 |
| | INCOME GRANT TOTAL | 64,30,90,973 |
| | **CAPITAL REVENUE** | |
| | **REVENU FUND** | |
| *1.* | SOLID WAST MANAGEMENT- MICRO COMPOST CENTRE | 3,64,67,000 |

| | | |
|---|---|---|
| 2 | MLA Fund | 14,92,176, |
| 3 | **KFW-** Development of Parks&Playfields GRANT | 1,49,00,000 |
| | CAPITAL REVENUE - REVENUE FUND | **5,28,59,176** |
| | **WATER SUPPLY FUND** | |
| 1 | **AMRUT-** UGSS PHASE III GRANT OF GOVT OF TAMILNADU (PROJECT SUSTANINABILITY GRANT FUND) UNDER ADB ASSISTED TNUIFTP(T-1) | 17,00,00,000 |
| | CAPITAL REVEUNE - WATERSUPPLY FUND | **17,00,00,000** |

## ABSTRACT

| | |
|---|---|
| INCOME GRANT TOTAL | **64,30,90,973** |
| CAPITAL REVENUE - REVENUE FUND | **5,28,59,176** |
| CAPITAL REVEUNE - WATERSUPPLY FUND | 17,00,00,000 |
| **GRANT TOTAL 2019-20** | **86,59,50,149** |

**உதவி தொகை:**

இம்மாநகராட்சிக்கு அரசின் பிற துறைகளின் மூலம் வசூலிக்கப்பட்ட கீழ்கண்ட பங்குத் தொகை வரவு வந்துள்ளது.

முத்திரை கட்டண மிகுவரி : 458.91 இலட்சம்

**செலவு**

இம்மாநகராட்சி அறிக்கையாண்டில் மொத்தம் செலவு ரூ.26128.16 லட்சங்கள். அதன் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. பணியாளர் ஊதியம்
   சம்பளம் :4182.86
   இதர செலவுகள் :2968.41

2. ஓய்வூதியம் :1929.39
3. இயக்க செலவுகள் (மின்கட்டணம்
தினக்கூலி ஊதியம் - பொது சுகாதாரம் :3207.40
4. பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு :1092.34
5. திட்ட செலவுகள் (தொழில்நுட்ப கட்டணம் :33.39
பொருட்காட்சி செலவு)
6. நிர்வாக செலவுகள் :2429.48
7. நிதி செலவுகள் (கடனுக்குரிய வட்டி தொகை
ஐயப்பாடுஉள்ள வரவினம் முதலியன) :1473.96
8. சொத்துக்கள் தேய்மானம் வகை :8810.90

**உதவி ஆணையாளர் (கணக்குகள்)**
**திருநெல்வேலி மாநகராட்சி**

30/7/2020

# திருநெல்வேலி மாநகராட்சி

**பொறியியல் பிரிவு**

**நிர்வாக அறிக்கை 2019-20**

## குடிநீர் விநியோகம்

திருநெல்வேலி மாநகராட்சியில் தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 100 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், மாநகராட்சிப் பகுதியில் மொத்தம் 76788 எண்ணம் குடிநீர் வீட்டிணைப்புகள் உள்ளன. மேலும், இம்மாநகராட்சியில் 1754 பொது நல்லிகள் மற்றும் 1355 எண்ணம் ஆழ்குழாய் கிணறுகள், 274 எண்ணம் சிறிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் மூலமும் குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது.

### 1. குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள்

திருநெல்வேலி மாநகராட்சியில் உள்ள மக்களுக்கு தற்போது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 100 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கும்பொருட்டு நகரின் 20 கி.மீ தொலைவில் உள்ள அரியநாயகிபுரம் எனும் இடத்தில் தாமிரபரணியை நீராதாரமாகக் கொண்டு ரூ.230 கோடி மதிப்பீட்டில் 50 MLD குடிநீர் கூடுதலாக பெறும் பொருட்டு அரசாணை எண். 9 / ந.நி. & கு.வ.து / நாள். 27.01.2014–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டம் ஜெர்மன் நாட்டு வங்கி நிதியுதவியுடன் (KfW) செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. அரசாணை எண். 634 / ந.நி. & கு.வ.து / நாள். 28.10.2015 மற்றும் 79 / ந.நி. & கு.வ.து / நாள். 10.02.2016–ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இத்திட்ட பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 29.7.2016 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 13.10.2016ம் தேதி அன்று வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி பணிகள் அனைத்தும் 31.12.2020 –ல் முடிவு பெறும் நிலையில் உள்ளன.

இதன் மூலம் தற்பொழுது தேவையான குடிநீர் 20 மில்லியன் லிட்டர் கூடுதலாக பெறப்பட்டு ஏற்கனவே உள்ள தலைமை நீரேற்றும் நிலையங்களில் பெறப்படும் 47.50 மில்லியன் லிட்டர் குடிநீருடன் மொத்தம் 67.50 மில்லியன் லிட்டர் பெறப்பட்டு தனி நபர்

ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 135 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படும். மேலும் இத்திட்டத்தின் மூலம் 2029ம் ஆண்டு மக்கள் தொகைக்கு ஏற்ப கூடுதலாக 15 மில்லியன் லிட்டர் குடிநீர்பெறப்பட்டு மொத்தம் 35 மில்லியன் லிட்டர் கிடைக்கப்பெறும் இறுதி கட்டமாக (ULTIMATE DRAWAL) 2044ம் ஆண்டின் மக்கள் தொகைக்கு ஏற்ப கூடுதலாக 15 மில்லியன் லிட்டர் கிடைக்கப்பெற்று மொத்தம் 50 மில்லியன் லிட்டர் குடிநீர் இந்த திட்டத்தின் மூலம் பெறப்பட்டு பொது மக்கள் பயன் அடைவார்கள்.

**2.பாதாள சாக்கடை திட்டம் (பகுதி 2 மற்றும் பகுதி 3)**

திருநெல்வேலி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்ற 2வது கட்டமாக மேற்கண்ட தொடர் நடவடிக்கையின் காரணமாக தற்பொழுது பாதாளச் சாக்கடை திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு ரூ. 289.01 கோடி மதிப்பீட்டில் அம்ரூத் திட்டத்தின் (2016–17) கீழ் நிறைவேற்ற 31.1.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 25.07.2018 ல் வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது .மேற்படி திட்டத்தின் கீழ் வார்டு எண் 1 முதல் 7 மற்றும் 39 முதல் 55 வார்டு பகுதிகளுக்கு திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

மேலும் 3வது கட்டமாக விடுபட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை நிறைவேற்ற ரூ.440.19கோடி மதீப்பீட்டில் நிறைவேற்ற 24.5.2018–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது மேற்படி திட்டத்தின் கீழ் வார்டு எண் 9, 13, 15,16, 20 முதல் 24, 26, 28, 30 முதல் 33, 35 முதல் 37 வரை மொத்தம் 18 வார்டுகள் முழுவதும் வார்டு எண் 8, 10, 11, 12, 14, 17,18, 25, 19, 27, 29, 34, 38 மொத்தம் 13 வார்டுகள் பகுதியாகவும் செயல்படுத்தப்படவுள்ளது.

அம்ரூத் திட்டத்தின் (2016–17) கீழ் பகுதி 2 மற்றும் பகுதி 3 பாதாளச் சாக்கடைத் திட்டம் முடிவடைந்து செயல்பாட்டிற்கு வந்தால் இம்மாநகராட்சியில் 90818 கட்டிடங்களுக்கு இணைப்புகள் வழங்க முடியும். இதனால் 214850 மக்கள் பயனடைவர்.

மேற்படி பாதாள சாக்கடை திட்டப் பணிகள் பகுதி – 2 31.07.2021 –லும் பகுதி –3 30.11.2021 –லும் முடிவு பெறும் என்ற விபரம் தெரிவிக்கப்படுகின்றது.

## 2. சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP)

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் 2019-20ன் கீழ் மாநகராட்சிப் பகுதிகளில் 10 எண்ணம் சாலைப்பணிகள் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் 10.125 கி.மீ நீளத்திற்கு சாலைகளை சீரமைக்கும் பணிகள் செய்து முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 3. திருநெல்வேலி சீர்மிகு நகரத் திட்டம் (Tirunelveli Smart City Scheme)

திருநெல்வேலி மாநகரம் 2017-18-ம் ஆண்டு சீர்மிகு நகரமாக (Smart City) தேர்வு செய்யப்பட்டு இத்திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் மொத்தம் ரூ.990.34 கோடி மதிப்பீட்டில் 59 பணிகள் எடுக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் சரக்கு வாகன முனையம், பூங்கா மற்றும் விளையாட்டு மைதானங்கள் மேம்படுத்துதல், இராமையன்பட்டி பகுதியில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல், மாநகராட்சி கட்டிடங்களின் மேற்கூரையில் சூரியஒளி மூலம் இயங்கும் மின்அமைப்பு ஏற்படுத்துதல், திடக்கழிவு மேலாண்மை பணிக்காக மின்கலம் மூலம் இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் நுண் உர மையங்கள் (Micro Compost Centre) போன்ற பணிகள் ரூ.46.16 கோடி மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

மற்றும், மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள சோடியம் ஆவி விளக்குகளை மின்சிக்கன எல்இடி விளக்குகளாக மாற்றுதல், சந்திப்பு பெரியார் பேருந்து நிலையத்தினை திரும்ப மேம்படுத்துதல், சீர்மிகு சாலைகள் அமைத்தல், நெல்லையப்பர் கோவிலினை சுற்றிலும் அழகுபடுத்துதல், நுண் உரக் கூடங்கள் அமைத்தல், போக்குவரத்து குறியீடுகள் அமைத்தல், என்.என்.ஹைரோடு பொருட்காட்சி திடலில் வர்த்தக மையம் கட்டுதல், நவீன பயணிகள் நிழற்குடைகள் அமைத்தல், நயினார்குளம் ஏரி அமைந்துள்ள பகுதியினை அழகுபடுத்துதல், வேய்ந்தான்குளம் புதிய பேருந்து நிலையத்தில் பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைத்தல் போன்ற 20 எண்ணம் பணிகள் ரூ.458.91 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று கொண்டு இருக்கின்றது.

மேலும், நேருஜி சிறுவர் கரையரங்கத்தில் அபிவிருத்தி பணிகள் செய்தல், நேதாஜி போஸ் தினசரி சந்தையினை மேம்படுத்தும் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிக்கு வாகனங்கள் கொள்முதல் செய்தல், பாளை. பேரூந்து நிலையத்தில் மேம்பாட்டு பணிகள் மற்றும் அங்கன்வாடி மைய கட்டிடங்களில் அபிவிருத்தி பணிகள் செய்தல் , த.மு.சாலையில் இரு சக்கர வாகன நிறுத்தம் அமைத்தல், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பேரூந்து நிலையத்தினை மேம்படுத்தும் பணிகள் செய்தல் போன்ற 19 எண்ணம் பணிகள் ரூ.191.90 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேலும், 13 திட்டப்பணிகளை ரூ.231.07 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நடவடிக்கையில் இருந்து வருகின்றது. மேலும், ரூ.62.30 கோடிக்கு பணிகள் தெரிவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

18/8/2020

செயற்பொறியாளர்,
திருநெல்வேலி மாநகராட்சி.

19.8.20.

## *2019-20 ஆம் ஆண்டிற்கான – திருநெல்வேலி மாநகராட்சியின் ஆட்சி அறிக்கை*

# வருவாய் பிரிவு:

*பொது வருவாய் மற்றும் வருவாய் கணக்குகளில் சொத்துவரியே பிரதான வரியாக இருந்து வருகின்றது. இப்பணியில் ஈடுப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை விபரம் கீழே மண்டலங்கள் வாரியாக கொடுக்கப்பட்டுள்ளது.*

***பணியிடங்கள் :***

| பணியிடங்கள் | தச்சநல்லூர் | பாளையங்கோட்டை | மேலப்பாளையம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| உதவி ஆணையாளர்(வ) | - | - | - | - |
| உதவி வருவாய் அலுவலர் | 1 | 1 | 1 | 1 |
| சிறப்பு வருவாய் அலுவலர் | 1 | 1 | 1 | 1 |
| வருவாய் உதவியாளர்கள் | 3 | 3 | 3 | 2 |

***சொத்துவரி:***

*சொத்துவரி அரை வருடத்திற்கு ஒரு முறை கீழ்கண்ட ஆண்டு வரிவிகிதத்தில் விதிக்கப்பட்டு வருகின்றது,*

| விபரம் | வரி விகிதம் |
|---|---|
| பொதுவரி | 10.50 |
| தண்ணீர் வரி | 3.00 |
| கல்வி வரி | 5.00 |
| கழிப்பிட வரி | 6.50 |
| விளக்கு வரி | 2.50 |
| மொத்தம் | 27.50 |

*சொத்துவரி நடப்பு ஆண்டு முடிவில் நான்கு மண்டல பகுதிகளுக்கும் சேர்த்து ரூ.3070.89 இலட்சம் (வழக்கு கேட்பு உட்பட) நிலுவையாக உள்ளது.*

*காலிமனைகளுக்கு 01.10.2009 முதல் சதுரடி விகிதத்தில் அரசாணையின்படியும் மாமன்ற தீர்மானம் அடிப்படையிலும் காலிமனை வரி விதித்து வசூல் செய்யப்பட்டு வருகின்றது.*

*சொத்துவரி, காலிமனைவரி, தண்ணீர் கட்டணம், தொழில் வரி, கடை வாடகைகளின் மூலம் மாநகராட்சிக்கு கிடைத்துள்ள வருவாய் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.*

சொத்துவரி சீராய்வு :

அரசாணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.7.2018ன்படி இம்மாநகராட்சியல் சொத்துவரி சீராய்வு 1-4-2018 முன் தேதியிட்டு அமுல்படுத்தப்பட்டது. இதன் மூலம் மாநகராட்சிக்கு வரிவருவாயில் சுமார் ரூ.12.00 கோடி கூடுதலாக வருவாய் எதிர்பார்க்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டது. பின்னர் அரசாணை (நிலை) எண். 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை நாள்: 19.11.2019ன்படி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது.

ரூ. இலட்சத்தில்

| இனங்கள் | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|
| சொத்துவரி | 6387.72 | 3052.66 | 3335.10 |
| தொழில்வரி | 879.98 | 451.67 | 428.31 |
| தண்ணீர் கட்டணம் | 2627.35 | 976.96 | 1650.42 |
| பாதாள சாக்கடை பராமரிப்பு கட்டணம் | 1005.49 | 71.86 | 933.63 |
| கடைகள் மற்றும் பலதரப்பட்ட இனங்கள் | 1185.40 | 462.62 | 722.78 |

*2019-2020ம் ஆண்டிற்கான கேட்பு வசூல் நிலுவை பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.*

*2019-20ம் ஆண்டில் தீவிர வரி வசூல் சம்பந்தமாக தபால் நிலையம் மூலம் கேட்பு அனுப்புதல், ஆட்டோ மூலம் விளம்பரம் செய்தல், எப்.எம்.வானொலி மூலம் அறிவிப்பு செய்தல், கூடுதலாக வரி தொகை செலுத்தாமல் உள்ள வரிவிதிப்புதாரர்களது பெயர் பட்டியலில் எடுக்கப்பட்டு அந்தந்த மண்டல அலுவலகத்தில் மைய பகுதியில் ஃபிளக்ஸ் போர்டுகள், ஜப்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.*

*மார்க்கெட், பேருந்து நிலையங்கள் :*

*மார்க்கெட், பேருந்து நிலையங்கள் (கடைகள் நீங்கலாக) மூலம் இம்மாநகராட்சிக்கு நடப்பு (19-20) ஆண்டில் ரூ.218.23 இலட்சம் கிடைத்துள்ளது.*

*சந்தைகள்:*

*திருநெல்வேலி மாநகராட்சியில் நான்கு மண்டல அலுவலகங்களிலும் கீழே கொடுக்கப்பட்டுள்ள விபரப்படி சந்தைகள் நடத்தப்பட்டு வருகின்றது.*

*1)திருநெல்வேலி மண்டலம் :*

*நேதாஜி தினசரி சந்தை : சந்தையிலுள்ள அனைத்து கடைகளும் தனித்தனியாக குத்தகைக்கு விடப்பட்டு சந்தை நடைபெறுகின்றது.*

மீன் சந்தை : துறை மூலம் வசூல் செய்யப்பட்டது.

2) பாளையங்கோட்டை மண்டலம் :

மகாத்மா காந்தி தினசரி சந்தை : சந்தையிலுள்ள அனைத்து கடைகளும் தனித் தனியாக குத்தகைக்கு விடப்பட்டு சந்தை நடைபெற்று வருகின்றது.

3) மேலப்பாளையம் மண்டலம்

கால்நடை வார சந்தையானது மாநகராட்சி மூலம் துறை மூலம் வசூல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மாநகராட்சி நான்கு மண்டலங்களுக்கும் சேர்த்து நவீன ஒருங்கிணைந்த ஆடறுப்பு மனை செயல்பட்டு. வந்த நிலையில் கடந்த 3.7.2019 முதல் பாளை மற்றும் திருநெல்வேலி மண்டலங்களில் கட்டப்பட்டுள்ள ஆடறுப்பு மனைகள் மற்றும் மேலப்பாளையம் மண்டல ஆடறுப்பு மனைகள் தனித்தனியாக ஏலம் விடப்பட்டுள்ளது. இதன் மூலம் 19-20ல் ரூ.16.89 இலட்.சம் வருமானம் ஈட்டப்படுகின்றது.

பேருந்து நிலையங்கள்:

திருநெல்வேலி சந்திப்பில் ஒன்றும், பாளையங்கோட்டையில் ஒன்றும், மேலப்பாளையம் மண்டலத்தில் புதிய பேருந்து நிலையம் ஆக மூன்று பேருந்து நிலையங்கள் செயல்பட்டு வருகின்றது. திருநெல்வேலி சந்திப்பில் ( ஆ பிரிவு பேருந்து நிலையம்) இங்கு வந்து செல்லும் பேருந்து நிலையம் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.12வீதம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வந்தது. தற்போது மேற்படி சந்திப்பு பேருந்து நிலையம் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டு வருவதால், பேருந்து நிலையம் முழுவதும் இடிக்கப்பட்டு புதியதாக கட்டப்பட்டு வருகின்றது.

பாளையங்கோட்டை பேருந்து நிலையம் இ பிரிவு சார்ந்ததாகும். இங்கு வந்து செலுலும் பேருந்து ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.8/- வீதம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகின்றது. இப்பேருந்து நிலையத்தில் நவீன கழிப்பிடம் மற்றும் குளியறை ஒன்றும் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்ன டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் இப்பேருந்து நிலையம் அ பிரிவு பேருந்து நிலையமாகும். இங்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு பேருந்து ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.15 வீதம் கட்டணம் வசூலிக்கப்பட்டு

வருகின்றது. மேலும் பயணிகள் வெயில், மழை ஆகியவைகளிலிருந்து பாதுகாத்துகொள்ளவும் அமர்ந்து இளைப்பாறி செல்லவும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஊனமுற்றோர்கள் தங்கி செல்வதற்கு ஒரு அறையும் உள்ளது. தாய்மார்களுக்கான பாலுாட்டும் அறை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**வாகன காப்பகம் :**

திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்தில் இரண்டு மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுவதற்கான வாகன காப்பகம் செயல்பட்டு வருகின்றது. மேற்கண்ட வாகன காப்பகத்தில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூலிக்கும் பணி மாநகராட்சி மூலம் Smart Card--- முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இம்முறையில் வாகன காப்பகத்தினுள் வரும் வாகனங்கள் குறித்த விபரங்கள் கணினியில் பதிவு செய்யப்பட்டு வாகன உரிமையாளர்களுக்கு பதிவுகள் மேற்கொண்டமைக்கான மின்னணு அட்டை வழங்கப்படுகின்றது. வாகனம் வெளியேறும் பொழுது மின்னணு அட்டை வாயிலாக வாகன காப்பகத்தில் வாகனம் நிறுத்தப்பட்ட காலம் அளவு கணக்கிடப்பட்டு தொகை வசூல் செய்யப்படுகின்றது.

**வருவாய் வரத்தக்க இனங்கள் :**

இம்மாநகராட்சியில் நடத்தப்பட்டு வரும் திருமண மண்டபங்கள் மற்றும் அதனால் மாநகராட்சிக்கு கிடைத்துள்ள வருமானம் :

| | மண்டலம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1) | பாளையங்கோட்டை | 2 |
| 2) | மேலப்பாளையம் | 1 |
| | மொத்தம் | 3 |

**அங்காடிக் கடைகள்**

ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் மற்றும் உலக வங்கி உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ள அங்காடி கடைகளும் அதன் மூலம் கிடைத்துள்ள வருமானம் :

தச்சநல்லூர் மண்டலம்

: தச்சநல்லூர் சாலையில் உள்ள கடைகள்

: சிந்துபூந்துறை சாலையில் உள்ள கடைகள்

பாளையங்கோட்டை மண்டலம் :

: பேருந்து நிலைய கடைகள்

: மகாராஜாநகர் கடைகள்

: மனகாவலம் ஆஸ்பத்திரி வளாகத்தில் உள்ள கடைகள்

: சீவலப்பேரி ரோட்டில் உள்ள கடைகள்

மேலப்பாளையம் மண்டலம்:

: அலுவலக வளாகம் (இருபுறம்)

: அலுவலக வளாக எதிர்புறம்

மேலப்பாளைய புதிய பேருந்து நிலைய கடைகள் (128 +2 ) உணவு விடுதிகள் இத்தகைய கடைகள் முலம் நடப்பு (19-20) ஆண்டுக்கு ரு.182 இலட்சம் வருமானம்

நவீன கட்டண கழிப்பிடங்கள் :

1) தச்சநல்லூர் வார்டு அலுவலகம்

1)பேருந்து நிலையம் : --
2)த.மு.சாலை : 1
3)சாலியர் தெரு : 1

2) பாளை வார்டு அலுவலகம் :

1) பேருந்து நிலையம் :1
2) மகாத்மா காந்தி தினசரி சந்தை :1
3) மகராஜநகர் : 1

மேலப்பாளையம் வார்டு அலுவலகம்:

1)புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் : 5
2)இலவச கழிப்பிடம் : 1

4) திருநெல்வேலி வார்டு அலுவலகம் :

1)நேதாஜி போஸ் மார்க்கெட் :1
2)கூலக்கடை பஜார் :1
3)காட்சி மண்டபம் :1
4)டவுன் உழவர் சந்தை :1
5)சண்டிகேஸ்வரார் சாலை :1
6)சேர்மாதேவி சாலை பேட்டை :1

*இந்த கட்டண கழிப்பிடங்கள் மூலம் ஆண்டொன்றிக்கு ரூ.105.73இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது, திருநெல்வேலி மாநகராட்சி, பாளை பேருந்து நிலையம், கட்டண கழிப்பிடம் பாளை வார்டு காந்தி மார்க்கெட்டில் உள்ள கட்டண கழிப்பிடங்கள் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு குத்தகைதாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது,*

***கல்வி நிறுவனங்கள் வரி :***

திருநெல்வேலி மாநகராட்சி — மாநகராட்சி பகுதிகளில் தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க தமிழ்நாடு அரசிதழ் எண் 33 நாள்: 25.01.2018ல் சட்ட திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக திருநெல்வேலி மாநகராட்சி — மாமன்ற தீர்மானம் எண்.6 நாள்: 13.04.2018—ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் மாவட்ட அளவில் அரசிதழில் விளம்பரம் செய்யப்பட்டு 30 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டு ஆட்சேபணைகள் கோரப்பட்டது. ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படாத நிலையில் மாவட்ட அரசிதழிலில் வெளியிடப்பட்டு கல்வி நிறுவனங்களின் மீது சொத்துவரி விதிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

***தொழில் வரி :***

1) நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண். 12503-2018-ஆர்1 நாள் 21.05.2018 ம் தேதிய சுற்றறிக்கையின் படி திருநெல்வேலி மாநகராட்சியில் 01.10.2018 முதல் தொழில் வரி (அரையாண்டு ஒன்றுக்கு) தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின்படி 25 சதவீதத்திற்கு குறையாமலும் 35 சதவீதத்திற்கு மிகாமலும் உயர்த்தி நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பொருள் சீட்டு தயார் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

*2)* இவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட தொழில் வரி மத்திய அரசு, மாநில மாநில அரசு ஊழியர்களுக்கும் அரசு சார்ந்த, பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் திருநெல்வேலி மாநகராட்சி எல்கைக்குள் தொழில் நடத்துபவர்கள், வியாபார நிறுவனங்கள் ஆகியவற்றிக்கும் மற்றும் அதில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் 01.10.2018 முதல் பொருந்தும்.

30/6/20

உதவி ஆணையாளர்(வ)(பொ)
திருநெல்வேலி மாநகராட்சி.

30/6/2020